# திருவாதிரை நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ திருவாதிரை சக்தி**

படன வேதாந்தம், ஆகமாந்தாந்தம்

நிருபாதிகம், பரமசாந்தம்

**3. திருப்பாவைபாசுரம் – 2 திருவாதிரை இயல்பு**

வையத்து வாழ்வீர்கள் நாமும்நம் பாவைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்

பையத் துயின்ற பரம னடிபாடி

நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி

மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடி யோம்

செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/5mf7gKaMwNc**

**விளக்கம் :**

வையகம் மற்றும் வையகத்தில் வாழ்பவர்கள் அனைவரும் சிவனின் அருள் பெற வேண்டும் இந்த சிவன் திருவாதிரையே ஆகும். இருக்கும்போது திரு ராஜா, நடக்கும் போது நடராஜா, விபூதியில் சிவராஜா, அனுபூதியில் ஆருத்ரா. எனவே நோன்பு என்று சொன்னால் அது ஒடுக்கம். அதுவே பிரதோஷம். இந்த பிரதோஷ காலத்தின் தான்;

நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்; செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்.

இந்த பிரதோஷ காலம் திருவாதிரையின் சிறப்பை நமக்கு உணர்த்துகிறது. அனைத்து சட்ட திட்டங்களும், ஆகம விதிகளும் வேத சூத்திரங்களும் அறிந்த அன்பரே திருவாதிரை ஆகும்.

நிரூபணம் செய்வதிலும் எடுத்த கட்சி ஜெயிக்க வைப்பதிலும் எந்த இடர் வந்தாலும் அத்தனையும் கடந்து நெருப்பாற்றில் நீந்தி...

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி வெற்றி தேடி தருபவரே திருவாதிரை ஆகும். மக்கள் சக்தி மகேசன் சக்தி என்று எண்ணி மக்களுக்கு உகந்தார் போல் திருவாதிரை வெற்றி பெறும்.

வையகம் வாழவே ஆதிரை நீ திருவாதிரை நீ, உலகியல் நாயகன் நீ, சட்டத்திட்டங்கள் நீ, செய்யும் கிரிசைகள் நீ, பரமனடி பாடல்கள் நீ, ஆகம விதிகள் நீ, உண்ணா நோன்புகள் நீ, எழுதாத சட்டங்கள் நீ, செய்யாத செயல்களே இல்லை என்பவன் நீ, தீர்ப்புக் குறள் நீ.

எனவே அனைத்து வேதங்களும், ஆகமங்களும், வழக்கு வாதங்களும் பரம சாந்தங்களும் அறிந்தவன் நீ, அண்டி வந்து யாசிப்பவர்க்கு இல்லை எனாது இருப்பதை கொடுக்கும், வையத்து வைத்தியன் நீ, வையத்து வழக்கறிஞர் நீ, வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் நீ.

உனது வாழ்விலே நெய்யுண்டு, உனது நோன்பிலே நெய்யில்லை. உனது பருவத்தில் பாலுண்டு. உனது நோன்பிலே பால் இல்லை. உனது

வாழ்விலே மையுண்டு, வழக்கிலே மையில்லை. உனது நாட்டிலே மலருண்டு. காட்டிலே மலரில்லை. உனது போதத்தில் நற்குறள் உண்டு. உனது வாதத்தில் தோல்வி இல்லை. எனவே உத்தமவாழ்விற்கு உகந்த வழிகள் திருவாதிரையே. திருவாதிரையே வருக! திருவாதிரையே அருள்க!

**<u>4. வேதத்தில் திருவாதிரை ஜோதிசக்தி</u>**

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மஹா ச்ரேஷ்டாய வித்மஹே

பசும்தநாய தீமஹி

துரிதாநிவிஸ்வாதீமஹி

தன்னோ ஆருத்ரா ப்ரசோதயாத்;

வெற்றிப் பாதையில் நடைபோடும்

வேத வேதாந்த தாரகையே

ஆகமங்கள் போற்றுகின்ற

ஆஹா நின்போல் வேறிலையே

திருவாய் மலர்ந்த புகழினிக்கும்

திரும்பி பார்க்க நல்துணையே

சாந்தம் என்றும் குடி கொண்ட

நமசிவாயா நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. திருவாதிரை கவிதை

வேதங்கள் சொல்வதும் செய்வதும் ஆதிரையே

ஆகம விதிகளும், மதிகளும் நின் செயல்மறையே

உபநிடதங்கள் உன் மலையே; அன்பின் ஆயகலையே

நிரூபணங்கள் நின் வாதமே நாயன்மார்களின் நாயகனே

அன்பே சிவம்; ஆருத்ரமே தரிசனம்

ஆரிய கூத்தாயினும் காரியத்தில் ஜெயம்

இரக்கமதில் இதயம் தொட்டு பழக்கம்

உலகமவர் எவராயினும் உயிர் காப்பவர்

சிவசக்தி என மகளிருக்கும் சமானம்

தேவ, அசுரரென மாற்றனுக்கும் சன்மானம்

சமநீதி, சுபநீதி, இயற்கை நீதியில் ஆனந்தம்

அந்தங்கள் ஆறும் தவஜம் கட்டி ஆடும் மங்கலம்

தில்லுமுல்லு என்றாலும் தகிட தத்தனம் பேசும்

அள்ளு – கொள்ளு என்றாலும் அடிப்படையில் வரும் கோபம்

வெற்றி வேல் என எப்போதும் நிரந்தர இரசிகர் தாபம்

சித்தம் போக்கு சிவம் போக்கெனவே ஊர் சுற்றும்

ஆடலும், பாடலும் ஒலியும் ஒளியும் போல

ஆயகலைகளும் நாதவிந்து கலவியலும் போல

ஆதவன் – கூட்டமும் நாட்டமும் கோணாதே போல

அட்டதிக்கு பாலகரும் கைகட்டி சேவகம் போல

## 6. அபிராமி அந்தாதியில் திருவாதிரை சக்தி

### அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

### இனிப் பிறவா நெறி அடைய

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
படியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

### நோய்கள் விலக

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் திருவாதிரை சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் மரீசயே நம – மற்றவரை மயக்கும் மாரீசனே போற்றி

ஓம் தமநாய நம – எத்தர்களின் எமதர்மனே போற்றி

ஓம் ஹம்ஸாய நம – சம்சார சாஹரத்தில் அன்னப்பறவையே போற்றி

| | |
|---|---|
| ஓம் ஸுபர்ணாய நம | – தர்ம, அதர்ம இருவழியே போற்றி |
| ஓம் புஜகோத்தமாய நம | – புஜங்களின் பாம்பணையே போற்றி |
| ஓம் ஹிரண்யநாபாய நம | – ஹரிஹர நாபியே போற்றி |
| ஓம் ஸுதபஸே நம | – நர நாராயணனே போற்றி |
| ஓம் பத்மநாபாய நம | – தாமரை வயிற்றோனே போற்றி |
| ஓம் ப்ரஜாபதயே நம | – பிரஜைகளின் தந்தையே போற்றி |
| ஓம் அம்ருத்யவே நம | – மரணமில்லா பெருவாழ்வே போற்றி |
| ஓம் ஸர்வத்ருஸே நம | – ஓரப்பார்வையில் ஜீவன் காப்பவனே போற்றி |
| ஓம் ஸிம்ஹாய நம | – இயல்பின் கனவே போற்றி |
| ஓம் ஸந்தாத்தே நம | – ஜீவன் முக்தனின் நாடகமே போற்றி |
| ஓம் ஸந்திமதே நம | – உலகியலின் திருவிளையாடலே போற்றி |
| ஓம் ஸ்திராய நம | – மாற்றமில்லா ஸ்திரத்தன்மையே போற்றி |
| ஓம் அஜாய நம | – அசுர எண்ணங்களின் விரட்டிடும் வீரமே போற்றி |
| ஓம் துர்மர்ஷணாய நம | – அசுரர்களின் பகைமையே போற்றி |
| ஓம் ஸாஸ்த்ரே நம | – வேதங்களின் நடையலங்காரமே போற்றி |
| ஓம் விஸ்ருதாத்மநே நம | – சத்யம், ஞானம் நடைமுறை நாயகனே போற்றி |
| ஓம் ஸுராரிக்நே நம | – தேவர்களின், சூரர்களின் எதிரிகளை அழிப்பவனே போற்றி |
| ஓம் குருவே நம | – குரு பகவானே போற்றி |
| ஓம் குருதமாய நம | – அனந்த குருவே போற்றி |
| ஓம் தாம்நே நம | – பேரொளியே போற்றி |
| ஓம் ஸத்யாய நம | – சத்திய ஆனந்தமே போற்றி |
| ஓம் ஸத்யபராக்ரமாய நம | – தோற்காத வீரமே போற்றி |
| ஓம் நிமிஷாய நம | – யோக நித்திரையே போற்றி |
| ஓம் அநிமிஷாய நம | – யோக விழிப்புநிலையே போற்றி |
| ஓம் ஸ்ரக்வீணே நம | – வைஜெயந்தி மாலாவே போற்றி |
| ஓம் வாசஸ்பதயே உதாரதியே நம | – வார்த்தையும், வார்ப்பும் நீயே போற்றி |
| ஓம் அக்ரண்யே நம | – முக்தி தேடலின் முனைப்பே போற்றி |
| ஓம் க்ராமண்யே நம | – கிராம சபையின் கட்டளையே போற்றி |
| ஓம் ஸ்ரீமதே நம | – அனைத்து செல்வ சீமானே போற்றி |

| | |
|---|---|
| ஓம் ந்யாயாய நம | – அத்வைத நியாயமே போற்றி |
| ஓம் நேத்ரே நம | – பரிணாம வளர்ச்சியே போற்றி |
| ஓம் ஸமீரணாய நம | – செயல் உயிரே போற்றி |
| ஓம் ஸஹஸ்ரமூர்த்நே நம | – ஆயிரம் தந்திரமே போற்றி |
| ஓம் விஸ்வாத்மநே நம | – விஸ்வாத்மாவே போற்றி |
| ஓம் ஸஹஸ்ராக்ஷய நம | – ஆயிரம் எழுத்தே போற்றி |
| ஓம் ஸகஸ்ரபதே நம | – ஆயிரம் நடையே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் திருவாதிரை சக்தி

மஹாகணேச நிர்ப்பின்ன விக்னயந்த்ரப்ரஹர்ஷிதா
பண்டாஸீரேந்த்ர நிர்முக்தசஸ்த்ரப்ரத்யஸ்த்ர வர்ஷிணீ

கராங்குலி நகோத்பன்ன நாராயணதசாக்ருதி
மஹா பாசுபதாஸ்த்ராக்னி நிர்தக்தாஸுர ஸைநிகா

காமேச்வராஸ்த்ர நிர்தக்த ஸபண்டாஸுரசூன்யகா
ப்ரஹ்மோபேந்த்ரமஹேந்த்ராதி தேவ ஸம்ஸ்துதவைபவா

ஹர நேத்ராக்னி ஸந்தக்தகாம ஸஞ்ஜீவநௌஷதி
ஸ்ரீமத்வாக்பவகூடைகஸ்வரூப முக பங்கஜா

கண்டாதகடிபர்யந்தமத்யகூட ஸ்வரூபிணீ
சத்தி கூடைகதாபன்ன கட்யதோ பக தாரிணீ

மூலமந்த்ராத்மிகாமூலகூடத்ரயகலேவரா
குலாம்ருதைக ரஸிகா குலஸங்கேதபாலினீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் திருவாதிரை சக்தி

ஸ்கந்த குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்

தாளினைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு

திருவருட் சக்தியை தந்தாட் கொண்டிடுவாய்

சத்ருப் பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டுக்

கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்

தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்

தென்திசையிலும் என்னைத் திருவருளால் காப்பாற்றும்

தென்மேற்கிலும் என்னைத் திறல்வேலால் காப்பாற்றும்

மேற்குத் திக்கில் என்னை மால்மருகா ரக்ஷிப்பாய்

வடமேற்கிலும் என்னை மயிலோனே ரக்ஷிப்பாய்

வடக்கில் என்னைக் காப்பாற்ற வந்திடுவீர் ஸத்குருவாய்

வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி திருவாதிரை சக்தி

கூகா என என் கிளை கூடிஅழுப்

போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா

நாகாசல வேலவ நாலு கவித்

தியாகா சுரலோக சிகாமணியே.(11)

செம்மான் மகளைத் திருடும் திருடன்

பெம்மான் முருகன், பிறவான், இறவான்

சும்மா இரு, சொல் அற,, என்றலுமே

அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.(12)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் திருவாதிரை சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வகுளா பரணம் | மாயமாலவகௌலா | சக்ரவாகம் | சக்ரவாகம் |

## 12. மூலமந்திரம்

ஓம் நமசிவய சிவயநம

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| செங்கருங்காலி | வெள்ளை | வெள்ளெருக்கு | |

## 14. பரிகாரம்

- நாய்களுக்கு உணவிடவும்.
- கால்நடைகளுக்கு உணவிடவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு அபயவரதீஸ்வரர் திருக்கோயில்,** அதிராம்பட்டினம் - தஞ்சாவூர்.

Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra